# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 30, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஜெர்மனியைச்சேர்ந்த முன்னணி ஐ.டி. நிறுவனமான 'நாகரோ எஸ்இ' நிறுவனத்தின் முழுப் பங்குகளையும் கையகப்படுத்த இந்திய ஐ.டி. நிறுவனமான 'பெர்சிஸ்டன்ட் சிஸ்டம்ஸ்' முன்வந்துள்ளது.

(i) ஓர் இந்திய ஐடி நிறுவனம் வெளிநாட்டில் மேற்கொள்ளும் மிகப்பெரிய முதலீடுகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. இக்கையகப்படுத்துதல் வெற்றிகரமாக முடிவடைந்தால், ஆண்டுக்கு சுமார் 290 கோடி டாலர் வருவாய் ஈட்டக்கூடிய மிகப் பெரிய ஐ.டி. நிறுவனமாக இது உருவெடுக்கும்.

(ii) மேலும், இந்தியா, வட அமெரிக்கா, ஐரோப்பா என 40-க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 46,000 ஊழியர்களுடன் பெர்சிஸ்டன்ட் உலகளாவிய வர்த்தகம் மிகப்பெரிய அளவில் விரிவடையும்.

(iii) நாகரோ நிறுவனத்தின் 21 சதவீத பங்குகளை பெர்சிஸ்டன்ட் ஏற்கெனவே கையகப்படுத்தியுள்ள நிலையில், அதன் முழு பங்குகளையும் வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது.

(iv) கடந்த ஜூன் 25-ஆம் தேதியிட்ட நாகரோ நிறுவனத்தின் பங்கு விலையைவிட சுமார் 140 சதவீத கூடுதல் தொகையை வழங்குவதாக பெர்சிஸ்டன்ட் அறிவித்துள்ளது.

2.அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் 2028-இல் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில், மகளிர் கிரிக்கெட்டுக்கு இந்தியா உள்பட 4 அணிகள் தகுதிபெற்றன.

(i) கடைசியாக 1900 பாரீஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாடப்பட்ட நிலையில், தற்போது 128 ஆண்டுகளுக்குப் பிறகு 2028 லாஸ் ஏஞ்சலீஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் சேர்க்கப்பட்டுள்ளது. டி.20 ஃபார்மட்டில் விளையாடப்படவுள்ள இதில், ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் தலா 6 அணிகள் பங்கேற்கவுள்ளன. அவற்றுக்கான தகுதி வரையறையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) வெளியிட்டது.

(ii) இதன்படி மகளிர் பிரிவில், நடப்பு டி20 மகளிர் உலகக் கோப்பை போட்டியில் ஒசியானியா, ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய பிரிவுகளில் முறையே டாப் அணிகளாக இருக்கும், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, தென்னாப்பிரிக்கா ஆகியவை ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதிபெற்றவையாக ஐசிசி அறிவித்தது.

3.டென்னிஸ் காலண்டரின் 3-ஆவது கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன், லண்டனில் தொடங்கியது.

4.கடந்த 1994- ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட யமுனை நதி ஒப்பந்தத்தை அமல்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஹரியாணா, ராஜஸ்தான் மாநிலங்கள் கையொப்பமிட்டன.

(i) ஹரியாணாவின் யமுனை நகர் மாவட்டத்தில் பாயும் யமுனை நதியில் உள்ள ஹாதினி குன்ட் தடுப்பணையில் இருந்து ராஜஸ்தானுக்கு நீர் கிடைக்கும் நோக்கில்,

கடந்த 1994-ஆம் ஆண்டு மேல் யமுனை நதி வாரிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், ராஜஸ்தானுக்கு நீரை விநியோகிக்க கால்வாய் அமைப்பு இல்லாததால், அந்த ஒப்பந்தத்தை அமல்படுத்த முடியாமல் போனது.

(ii) இந்நிலையில், அந்த ஒப்பந்தத்தை அமல்படுத்த புது தில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா முன்னிலையில், ஹரியாணா மற்றும் ராஜஸ்தான் அரசுகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.

(iii) இதையடுத்து, மழைக் காலங்களில் ஹாதினி குன்ட் தடுப்பணையில் இருந்து நிலத்தடி குழாய் அமைப்பு மூலம், தனக்குரிய யமுனை நதிநீரை ராஜஸ்தான் பெறும். இந்த நடவடிக்கை அந்த மாநிலத்தின் மிகவும் வறண்ட பகுதிகளில் சமூக-பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுவதுடன், குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யும். இதனால் லட்சக்கணக்கான மக்கள் பயனடைவர்.

(iv) இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் அமித் ஷா பேசுகையில், 'ஹரியாணா, ராஜஸ்தான் மக்கள் சுமார் 30 ஆண்டுகளாக எதிர்கொண்டு வந்த தண்ணீர் பிரச்னை தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. 'பேச்சுவார்த்தை மூலம் தீர்வு' என்ற மந்திரத்துக்கு இந்த ஒப்பந்தம் சிறந்த எடுத்துக்காட்டு.

(v) இந்த ஒப்பந்தத்தின் செயல் திட்டம் ஹரியாணா, ராஜஸ்தான் மற்றும் மத்திய நீர் ஆணையத்தால் தயாரிக்கப்பட்டது. நெடுங்காலத்துக்கு சச்சரவு இல்லாத ஒப்பந்தமாக இது திகழும்' என்று தெரிவித்தார்.

5.மேற்காசிய போரால் ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக, வணிக மற்றும் தொழில்நிறுவன நுகர்வோருக்கு பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனையில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை புதன்கிழமை (ஜூலை 1) முதல் மத்திய அரசு நீக்க உள்ளது.

(i) ஈரான் - அமெரிக்கா இடையே போர் நிறுத்தத்துக்கான அமைதி ஒப்பந்தம் கையாப்பமாகி, சர்ச்சைக் குரிய ஹோர்முஸ் நீரிணை பகுதியில் சரக்கு கப்பல்களின் போக்குவரத்து சீரானதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்கிறது.

(ii) மேற்காசிய போரால் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டு தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து, பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை நிலையங்களில் ஒரு வாகனத்துக்கு நாள் ஒன்றுக்கு அதிகபட்சம் 200 லிட்டர் மட்டும் விநியோகிக்கவும், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக பயன்பாட்டுக்கு சில்லறை விற்பனை நிலையங்களில் பெட்ரோல், டீசல் விற்க தடை விதித்தும் கடந்த ஜூன் 12- ஆம் தேதி மத்திய அரசு உத்தரவிட்டது.

(iii) தற்போது இந்த உத்தரவை மத்திய அரசு திரும்பப்பெற்றுள்ளது. இது தொடர்பாக மத்திய பெட்ரோலிய அமைச்சகம் உத்தரவில், 'நாட்டில் பெட்ரோலியப் பொருள்களின் விநியோக நிலை குறித்து ஆராய்ந்ததன் அடிப்படையில், ஜூன் 12-ஆம் தேதி பிறப்பித்த கட்டுப்பாடு உத்தரவு இனி தொடரத் தேவையில்லை என மத்திய அமைச்சகம் தீர்மானித்துள்ளது. அதன்படி, அந்த உத்தரவு திரும்பப் பெறப்படுகிறது.

6.தென்னிந்திய மாநிலங்களின் கவலையைப் போக்கும் நோக்கில், அனைத்து மாநிலங்களிலும் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 50 சதவீதம்

அதிகரிக்க, பல்வேறு வழிமுறைகளை மத்திய அரசு பரிசீலித்துவருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுதொடர்பாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறியுள்ளதாவது:

(i) மகளிர் இடஒதுக்கீடு சட்டம் தொடர்பான அரசமைப்புச் சட்ட திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை கிடைக்க வில்லை. இதனால் அந்த மசோதாவை மத்திய அரசால் நிறைவேற்ற முடியாமல் போனது. இதையடுத்து அந்த மசோதாவின் புதிய வரைவை கொண்டு வர மத்திய அரசு முயற்சித்து வருகிறது.

(ii) முன்பு கொண்டுவரப்பட்ட மசோதாவை அடிப்படையாகக் கொண்ட இந்தப் புதிய வரைவு, 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், மாநிலங்களில் தற்போது உள்ள மக்களவை இடங்களின் விகிதத்தை மாற்றமின்றி முழுமையாக வைத்திருக்க பரிந்துரைத்துள்ளது. எனினும் அதுகுறித்து எந்தவொரு இறுதிமுடிவும் எட்டப்படவில்லை.

(iii) அதேவேளையில், தற்போது மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டால், அது மக்களவையில் தங்கள் அரசியல் அதிகாரத்தை குறைக்கும் என்று தென்னிந்திய மாநிலங்கள் கவலை எழுப்பியுள்ளன. இந்தக் கவலையைப் போக்கும் நோக்கில், அனைத்து மாநிலங்களிலும் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 50 சதவீதம் அதிகரிக்க, பல்வேறு வழிமுறைகளை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

(iv) மத்திய அரசுக்கு நம்பிக்கை ஏற்பட்டால் மட்டுமே...:

- தற்போது மேற்கொள்ளப்படும் புதிய மக்கள்தொகை கணக்கெடுப்பின் விவரங்கள் வெளியாக காலமாகும் என்பதால், 2011-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப் பின் அடிப்படையில் மக்களவை, சட்டப்பேரவைத் தொகுதிகள் மறு சீரமைப்பு செய்யப்படும்.
- இதற்கான புதிய மசோதாவை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் போதிய எம்.பி.க்கள் ஆதரவு கிடைக்கும் என்று மத்திய அரசுக்கு நம்பிக்கை ஏற்பட்டால் மட்டுமே, நாடாளுமன்றத்தில் அந்தமசோதா தாக்கல் செய்யப்படும்.
- தற்போது மக்களவையில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் சுமார் 300 எம்.பி.க்கள் உள்ளனர். அரசமைப்புச் சட்டத்திருத்த மசோதாவை நிறைவேற்ற மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை, அதாவது 360 எம்.பி.க்களின் ஆதரவு மத்திய அரசுக்குத் தேவை என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
- கடந்த ஏப்ரலில் அறிமுகம் செய்யப்பட்ட அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவின்படி, மக்களவையில் மகளிருக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கும் வகையில், மக்களவைத் தொகுதிகளை அதிகபட்சமாக 850 வரை அதிகரிக்க வேண்டும் என்பது மத்திய அரசின் திட்டம். இதே போல அந்த மசோதாவின்படி, மாநில மற்றும் யூனியன் பிரதேச சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் வகையில், பேரவைத் தொகுதிகளும் அதிகரிக்கப்படும்.

7.உள்கட்டமைப்புத் திட்டங்களை ஊக்குவிக்கும் நோக்கில், தேசிய முதலீட்டு மற்றும் உள்கட்டமைப்பு நிதியத்தில் (என்ஐஐஎஃப்) கூடுதலாக ரூ.30,000 கோடி முதலீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில்

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) கடந்த வாரம் பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சர வைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் என்ஐஐஎஃப்பில் கூடுதலாக ரூ.30,000 கோடி முதலீடு செய்ய ஒப்புதல்அளிக்கப்பட்டது. இதன்மூலம், என்ஐஐஎஃப்பில் மத்திய அரசின் மொத்த முதலீடு ரூ.60,000 கோடியாக அதிகரித்துள்ளது.

(ii) தேசிய முதலீடு மற்றும் உள் கட்டமைப்பு நிதிய நிறுவனத்தால் (என்ஐஐஎஃப்எல்) என்ஐஐஎஃப் நிர்வகிக்கப்படுகிறது. அதில் மத்திய அரசுக்கு 49 சதவீத பங்குகள் உள்ளன.

(iii) இந்தியாவுக்கு கூடுதல் தனியார் மூலதனத்தை கொண்டு வருவதிலும், நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் பங்களிப்பதிலும் என்ஐஐஎஃப் பணியை அங்கீகரிக்கும் வகையில், மத்திய அரசின் தற்போதைய கூடுதல் முதலீடு போக்குவரத்து, எரிசக்தி, டிஜிட்டல், நகர்ப்புற உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முதலீடுகளுக்கு தூண்டுகோலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

8.பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (டிஆர்டிஓ) திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான நிதி அதிகாரங்களை வழங்குவது தொடர்பான திருத்தப்பட்ட செயல் திட்டத்தை (டிபிஎஃப்-2026) பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டார்.

(i) பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டுத் துறையின் கீழ் டிஆர்டிஓ இயங்கி வருகிறது. இந்நிலையில், டிஆர்டிஓவின் ஆராய்ச்சி முன்னெடுப்புகளுக்கு விரைவாக நிதி ஒதுக்கீடு செய்யவும் சோதனை மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளவும் டிபிஎஃப்-2026 வழிவகுக்கிறது.

(ii) இந்த செயல்திட்டத்தை வெளியிட்டு ராஜ்நாத் சிங் பேசியதாவது:

- பாதுகாப்பு அமைப்புகள், தொழில் நுட்பங்களை விரைவாக உற்பத்தி செய்து அவற்றை நமது படைகளுடன் இணைக்கவும் தொழில் மற்றும் கல்வி நிறுவனங்களிடையே ஒத்துழைப்பை அதிகரிக்கவும் டிபிஎஃப்-2026 உதவுகிறது.
- ஆத்மநிர்பர் பாரத் தொலைநோக்குத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த செயல் திட்டம் பாதுகாப்பு தொழில்நுட்பங்களில் தற்சார்பை அதிகரித்து தேச பாதுகாப்பின் தயார்நிலையை வலுப்படுத்துகிறது என்றார்.

(iii) இந்நிகழ்வில் முப்படை தலைமைத் தளபதி என்.எஸ்.ராஜா சுப்ரமணி, பாதுகாப்புச் செயலர் மற்றும் டிஆர்டிஓ தலைவருமான ராஜேஷ் குமார் சிங், செயலர் (பாதுகாப்பு உற்பத்தி) சஞ்சீவ் குமார் மற்றும் பிற மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.